18 ஏப்ரல் 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலம் 3ம் ஞாயிறு

## எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்: **எதிர்நோக்கில் உயிர்ப்பு**

# மனந்திரும்புங்கள், மன்னியுங்கள், சாட்சியம் பகருங்கள்

இக்காலக்கட்டத்தில் எந்தவொரு தகவலை அறிந்து கொள்வதற்கு, நாம் தேடும் பொருள் நமது கைப்பேசி அல்லது கணினி இருக்கும் "google" செயலி உதவுகிறது. 'கூகள்' என்பது நமது வாழ்வின் முக்கியமான அடிப்படையான வார்த்தையாக மாறிவிட்டது. இன்றைய வாசகத்தில் மூன்று முக்கிய அடிப்படை வார்த்தைகள் வருகின்றன. "மனம் மாறுங்கள்", "பாவமன்னிப்பு", "சாட்சிகள்" என்பதே அந்த மூன்று வார்த்தைகள். மேல்விபரத்திற்கு உங்களின் விவிலியத்தைத் திறந்து பாருங்கள்.




விவிலியத்தைப் போதிக்கும் போது மிகவும் கடுமையாக திருஅவை நடந்து கொள்ள முடியாது. திருநூல் வழியாகவே கிறிஸ்துவையும் அவர் மீதுள்ள நமது நம்பிக்கையும் அறிவும் வளர்கிறது. **நமது வாழ்வில் இறைவார்த்தையின் செயல்பாடு தேவை** - தேவையான நேரத்தில் மட்டுமல்ல மகிழ்ச்சியான தருணத்திலும் அது நமக்கு தேவைப்படுகிறது. மனம் மாறுவதற்கும் திருக்கட்டளைகளை கடைப்பிடிப்பதற்கும் இறைவார்த்தை நம்மை தூண்டும். இதனால் பாவமன்னிப்புப் பெற்று, வாக்களிக்கப்பட்ட விண்ணக அரசை அடைவோம்.

இயேசுவின் போதனையைக் கேட்டு எத்தனை காலம் அவரைத் தொடர்ந்து வந்தனர் என்பதை விட்டுவிடுவோம். அவரது உயிர்ப்பை அடுத்து, அவர்கள் இன்னும் தெளிவற்ற நிலையில் இருக்கிறார்கள் என்பதை அவர் அறிந்து கொண்டார். அவர்களும் நம்மில் பலரை போல் இருக்கின்றனர். திருநூலைப் புரிந்து கொள்ள அவர்களின் உள்ளங்களை அவர் தொடுகிறார். தாம் பாடுபட்டு, இறப்பிலிருந்து உயிர்ப்பிக்க வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார். பாவமன்னிப்புக்காக மனம் மாறும்படி எல்லா நாட்டினர்க்கும் அவரது பெயரால் போதிக்கப்படும். இதற்கு சாட்சியாகும் அதிகாரத்தை திருத்தூதர்களுக்கு அவர் வழங்கினார். அவ்வாறே, இறைவார்த்தையை நாம் புரிந்து கொள்ளும் விதத்தில் போதிக்கும் அதிகாரத்தை கிறிஸ்து திரு அவைக்கு வழங்கினார்.

கடைசி இராவுணவின் போது, அப்ப இரசத்தின் வழியாக தமது உடலையும், இரத்தத்தையும் இயேசு வழங்கியது, சீடர்களின் மத்தியில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. அப்பத்தைப் பிட்கும் இந்தச் செயலால் அவர்கள் இயேசுவைக் கண்டறிய முடிந்தது. திருப்பலியில் திரு அவை ஏற்படுத்திய திவ்விய நற்கருணையால், கிறிஸ்து நம் உடனிருப்பதை நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது.

இறைவார்த்தைக்கும் நமது பாவத்திற்காகவும் உலகப் பாவத்திற்காகவும் அர்ப்பணித்த கிறிஸ்துவின் ஒரே பலிக்கும், திரு அவை சாட்சியாக இருப்பது போல், ஆண்டவரின் நற்செய்தியை அறிவிக்கும் நமது அழைப்பை வாழ்ந்து காட்ட வேண்டும். "நான் உரத்த குரலில் ஆண்டவரிடம் மன்றாடுகின்றேன்; அவர் தமது திருமலையிலிருந்து எனக்குப் பதிலளிப்பார்." தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் நாம்.

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

"எனக்கு அறிவுரை வழங்கும் ஆண்டவரைப் போற்றுகின்றேன்; இரவில்கூட என் மனச்சான்று என்னை எச்சரிக்கின்றது."

(திபா.16:7)

**இன்றைய வாசகங்கள்:**

திப. 3: 13-15, 17-19;
திபா. 4: 2, 4, 6-7, 9;
1யோவா. 2: 1-5;
லூக். 24: 35-48

INTERNAL CIRCULATION ONLY
BUL 16/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org